[1978 மார்ச் 1

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து அப்படி ஒரு திட்டம் வருமானால், அதைப் பரிசீலிக்கலாம்.

சென்னை புளியந்தோப்பு இறைச்சிக்கூடம்.

* 332 வினா— திரு. சு. பாலன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை புளியந்தோப்பு பகுதியில் மாநகராட்சி மூலம் கண்காணிக்கப்படும் ஆடு, மாடுகள் வெட்டப்படும் இறைச்சிக் கூடத்தினை நவீன கூடமாக மாற்றும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

[முற்பகல் 9-30]

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, அந்தக் கூடமும் அதைச் சுற்றியுள்ள இடங்களும் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அதைச் சீர்படுத்தத் தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இப்போது சென்னைக்கு 25 மைல் தொலைவில் உள்ள திருவள்ளூர் சாலையில் ரெட்ஹில்ஸ் அருகிலுள்ள கொடிவெள்ளி கிராமத்தில் நவீன முறையில் அதை அமைக்கும் கருத்து அரசின் பரிசீலனை யில் உள்ளது.

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, புளியந் தோப்பில் உள்ள ஆடு மாடுகள் வெட்டும் நிலையத்தில் அந்த ஆடு மாடுகளுக்கு வியாதி, நோய் உள்ளதா என்பதைப் பரிசோதிப்பதற்காக எத்தனை கால்நடை மருத்துவர்கள் இருக்கி றார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதைப்பற்றிய விவரம் இல்லை.

ஸ்டான்லி மருத்துவமனை அருகே புதிய சுரங்கப்பாதை

*333 வினா— திரு. அ. செல்வராசன், திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை, ஸ்டான்லி மருத்துவமனை (புறநோய்ப் பிரிவு அருகில் இருக்கும் M. C. ரோட் ரயில் பாதையின் குறுக்கே ஒரு சுரங்கப்பாதை (Subway) ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?